DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No.677 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : பொன்னம்மாள் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | | |
| Mail ID | : | Mobile No. | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தற்சமயம் நீங்கள் உங்களது பணி பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்று விட்டீர்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தமாக உணவு பாதுகாப்பு அலுவலர் சாம்பிள் எந்த தொகுதியில் கிடைக்கப்பெற்றது என்றால் 31. 7. 2018 ம் தேதியன்று. இதே எதிரியிடமிருந்து இந்த சாம்பிள் இல்லாமல் வேறு சேம்பிலும் உங்களுக்கு அனுப்பப்பட்டது என்றால் அது ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல இயலும். இரண்டையும் தொடர்பு படுத்த இயலாது, இரண்டும் தனித்தனியானது. இந்த சேம்பில் விஷயமாக 14 நாட்களுக்குள்ளாக உணவு பாதுகாப்பு அலுவலரிடம் இருந்து அனுப்ப வேண்டும் என்ற விஷயத்தை குரல் கொடுத்து உள்ளீர்களா என்றால் 14 நாட்கள் அதிகமாகும் என்பதால் காலதாமதம் குறித்த கடிதத்தை முன்னே 01.08.2018 அன்று நியமன அலுவலருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம்.

2. 01.08.2018 அனுப்பியதற்கான ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வழக்கு கோப்பில் உள்ளது. நியமன அலுவலர் அந்த கடிதத்தை அந்த எப்பொழுது என்ற அக்னாலேஜ்மென்டை சீலுடன் கோப்பிற்கு எடுத்துக் கொள்வார் என்றால் ஆமாம். அதுஎன்னிடம் காட்டப்படும் இறுதி அறிக்கையின் பக்கம் 51 ல் இணைக்கப்பட்டுள்ள கடிதம் என்றால் ஆமாம். அதை நியமன அலுவலர் பெற்றுக் கொண்டதாக முத்திரையிடப்பட்டுள்ள தேதி ஜூன் 13 2019 என்று முத்திரையிடப்பட்டுள்ளது என்றால் நியமன அலுவலர் தான் கேட்க வேண்டும். நியமன அலுவலர் அவர்களுக்கு 14 நாட்களில் ஆய்வு செய்ய முடியாது என்பதற்கான காரணத்தையும் அனுப்பினீர்களா என்றால் ஆமாம். என்ன காரணம் என்றால் அதிக அளவில் பகுப்பாய்விற்காக வந்ததாலும் அதில் Vacant Portion அதிகமாக உள்ளதாலும் தாமதம் ஆகும் என்ற காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தின் உணவு பாதுகாப்பு அலுவலர் ஆய்விற்கு எடுத்து சென்னையில் உள்ள பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டும் என்பதுதான் உத்தரவு என்றால் இல்லை. எங்களது எல்லைக்குட்பட்டு நாங்கள் செய்வோம்.
3. திருப்பூரில் திருப்பூர் மாவட்டத்திற்கான உணவு பாதுகாப்பு சென்னையில் நடத்த வேண்டும் என GO உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. உணவு பாதுகாப்பு அலுவலர் எங்களுக்கு சென்னையில்தான் ஆய்வகம் உள்ளது என்றாலும் அவரது தேவைக்காக மதுரைக்கு அனுப்பியுள்ளதாக சொல்லியுள்ளது தவறா என்றால் ஆமாம். எங்களது எல்லைக்குட்பட்டதற்கு ஆய்வு தான் நாங்கள் செய்வோம்.
4. திருப்பூர் உங்களது எல்லைக்குள் வருமா என்றால் இரண்டு அந்த வருடங்களுக்கு ஒரு முறை ஆணையர் உத்தரவின் பேரில் மாற்றுவார்கள். தன்னிச்சையாக உணவு பாதுகாப்பு அலுவலர் எல்லையை மாற்றி அனுப்ப இயலாது. அந்த தேதியில் திருப்பூர் மாவட்டம் உங்களது எல்லைக்குட்பட்டதா என்றால் உள்ளது. எங்களது எல்லையில் இல்லை என்றால் நாங்கள் சேம்பிளை வாங்க மாட்டோம்.
5. எல்லையை மாற்றுவதற்காக பாதுகாப்பு அலுவலருக்கும் அந்த கோப்பை அனுப்பப்படும் என்றால் ஆணையர் ஆய்வகத்திற்கும் நியமன அலுவலருக்கும் அனுப்புவார்கள். அவர் உணவு பாதுகாப்பு அலுவலருக்கும் அனுப்புவார்கள் என்றால் ஆமாம். உணவு பாதுகாப்பு அலுவலர் அந்த GO ன் படி தான் ஆய்விற்கு அனுப்புவார் என்றால் ஆமாம். நீங்கள் இந்த சேம்பிளை எடுத்துக் கொண்ட ஒரு

வருடம் கழித்து தான் ஆய்விற்கு உட்படுத்தினீர்கள் என்றால் 11 மாதத்திற்கு உட்படுத்தினேன். எந்த தேதியிலிருந்து என்றால் 03.06 2019 லிருந் 10.06.2019 வரை ஆய்விற்கு உட்படுத்தினோம். இந்த பதினோரு மாத காலகட்டத்தில் இந்த சேம்பிளை எந்த வகையில் பாதுகாத்தீர்கள் என குறிப்பில் குறிப்பிடவில்லை என்றால் ரிபோர்ட்டில் இருக்காது. அதை எவ்வகையில் பாதுகாப்பு வைக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் இல்லை என்றால் சேம்பிளை பாதுகாக்க வைக்க தனியாக ஒருவர் நியமிக்கப்பட்டு ஆவணங்கள் பராமரித்து வருகிறார்.

6. நியமன அலுவலர் அவர்களுக்கு மேற்படி சேம்பிளை எவ்வாறு பாதுகாக்க பட்டது என்பது குறித்து நீங்கள் அனுப்பவில்லை என்றால் அது அவர்களுக்கு தேவையில்லாதது நான் அனுப்பவில்லை. உங்களுக்கு கிடைக்கக்கூடிய சேம்பிள் உணவு பாதுகாப்பு விதி 2011 ன் படி விதி 2.4–III ன் படி ஆகியவர்களை பின்பற்றி தான் அனுப்பப்பட்டதை நீங்கள் பெற வேண்டும் என்றால் என்றால் ஆமாம்.
7. உணவு பாதுகாப்பு விதி 2011 ன் படி விதி 2.4(2)(3) ன் படி வாழ்விற்கு அனுப்பப்பட்ட பொருட்கள் உடைந்து இருந்தாலோ அல்லது ஆய்விற்கு தகுதியில்லாத நிலையில் இருந்தாலோ 7 நாட்களுக்குள் மீண்டும் வேறு சேம்பிளை அனுப்ப சொல்ல உணவு பாதுகாப்பு அலுவலருக்கு சொல்லவேண்டும் என்றால் ஆமாம் .
8. 2.4.2(6) விதியின் படி நீங்கள் 14 நாட்களுக்குள் ஆய்வு செய்ய முடியாத காரணங்களுக்கு குறிப்பிட்ட நாட்கள் தேவைப்படுவதாக நியமன அலுவலருக்கு கடிதம் எழுத வேண்டும் என்றால் ஆமாம். உங்களது கடிதத்தில் எவ்வளவு நாட்கள் வேண்டும் என வேண்டும் போல் வைக்கவில்லை என்றால் இல்லை 350 நாட்கள் வேண்டியுள்ளோம். 2.4–III ன் விதியின் படி சொன்ன வாறு பேக்கிங் செய்யாமலும் ஒரு வருட காலம் உணவு சேம்பிளை வைத்திருக்கும் பொழுது வேறு விதமான மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் நாங்கள் Fit ஆக இருந்தால் தான் வாங்குவோம். அப்படி இல்லை என்றால் இரண்டாவது சாம்பிள் வாங்குவோம். வேறு விதமான மாற்றங்கள் ஏற்படும் என்றால் ஆமாம் . உணவு பாதுகாப்பு அலுவலர் சேம்பிளை அனுப்பும் போது எந்த மாதிரி பேக்கிக் செய்யப்பட்டது என குறித்து அனுப்புவாரா என்றால் அது தேவையில்லை.
9. டீத்துள் 1200 கிராம் சமபாகமாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் காக்கி கவரில் முழுவதுமாக சுற்றி ஒட்டி பேக்கிங் செய்யப்பட்டு அனுப்பிய நிலையில் வெறும் காக்கி கவரில் அனுப்பக்கூடாது என்றால்

அவ்வாறு அனுப்பவில்லை. காக்கி கவரில் பேக் செய்து அனுப்பக்கூடாது என்றால் ஆமாம்.

10. ஆய்வறிக்கையில் பக்கம் 57 ல் 500 கிராம் உணவு பகுப்பாய்விற்காக Sealed பாலிதின் கவரில் without label declaration என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்களது ஆய்வு விதியின் படி சேம்பிள்களை பாலித்தீன் கவரில் ஆய்விற்கு அனுப்பப்படக்கூடாது என உள்ளது என்றால் சரியல்ல, Suitable container ல் அனுப்பலாம் என உள்ளது. உங்களுக்கு அனுப்பிய மாதிரி காக்கி கலர் கவரில் நூலால் கட்டி அனுப்பியதாக சொல்லி உள்ளார் என்றால் இல்லை. அந்த உணவு பாதுகாப்பு அலுவலர் காக்கி கவரில் நூலால் கட்டிய அனுப்பிய நீங்கள் ஆய்வு செய்யாமல் வேறு மாதிரியே ஆய்வு செய்து தவறாக அறிக்கை கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை.

11. சேம்பிளில் ஈரப்பதமான பொருளையோ சேர்த்தோ அல்லது ஈரப்பதம் சேர்த்து பூசி உங்களுக்கு அனுப்பக்கூடாது என்றால் ஆமாம். பாலிதின் கவருடன் பேக்கிங் சேம்பிள் வர வாய்ப்பு இல்லை என்றால் நான் பாலிதி ன் கவரில் சேம்பிளை வைத்து சீல் வைத்து Wrapped cover ;ல நான் வாங்கினேன். இந்த சேம்பிளின் கவர் மேல் மேற்படி உணவு மாதிரிகளில் குறிப்புகளுடன் பசையிட்டு ஒட்டி அனுப்புவார்கள் என்றால் ஆமாம். இந்த சேம்பிள் மிக்சர் என்றால் ஆமாம். இந்த மிக்சர் உணவு பொருள் என்பதால் கண்டைன்னரில் பேக்கிங்க செய்திருந்தாலும் அல்லது பாலிதின் கவரிலும் பேக்கிங் செய்திருந்தாலும் அது சரியான முறையில் பேக்கிக் செய்யாமல் இருந்தால் உணவு பொருள் கெட்டுப் போகும் என்றால் கெட்டுப்போக வாய்ப்புள்ளது என்றால் ஆமாம். இது பாலிதீன் கவரில் இருந்தது. பாலிதீன் கவரில் இருந்தாலும் ஈரப்பதம் ஏற்பட்டு கெட்டுப்போக வாய்ப்பு உள்ளது என்றால் இல்லை. எண்ணெய் பலகாரம் என்பதால் பாலித்தின் கவரில் ஒரு வருடம் இருந்தாலும் கெட்டுப் போகா போகாதா என்றால் என்றால் ஆமாம் . நீங்கள் உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் என்றாலும் எண்ணெய் பலகாரங்கள் ஒரு வருடம் பாலித்தீன் கவரில் இருந்தால் கெட்டுப் போகும் என்றால் சரியான ஸ்டோரேஜ் கன்டிசனில் வைத்தால் கெட்டு போகாது.

12. 11 மாதம் காலம் கழித்துதான் ஆய்வுக்கு உட்படுத்தியதால் அந்த பொருள் ஆய்வுக்கூட்டம் போது அந்த பொருள் கெட்டுப்போகாமல் இருப்பது என்பதற்கான ஆவணம் இல்லை என்றால் உள்ளது. அதைநியமன அலுவலருக்கு அனுப்பவில்லை

என்றால் ஆமாம். அறிக்கையில் ஆய்வு செய்யும் பொழுது அந்த பொருள் இவ்வாறு இருந்தது என்பது குறித்தும் அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என்றால் பார்ம் பி– ல் உள்ளது. சேம்பிள் Condition Fit For Analysis என்று சரியான நிலையில் இருந்ததால் 3 தேதி தான் ஆய்வுக்கு எடுத்துள்ளேன். நீங்கள் ஆய்வு செய்யும் பொழுது தகுதியான பொருளாக இருக்க வாய்ப்பில்லை என்றாலும் நீங்கள் உங்கள் அறிக்கைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. இந்த ஆய்வு செய்த காலக்கட்டங்களில் நீங்கள் இந்த சேம்பிளை வேறு எல்லைக்கு அனுப்பி ஆய்வு செய்ய வேண்டுகோள் வைக்கவில்லை என்றால் வைக்கவில்லை.

13. ஆய்விற்கு உட்படுத்தி உணவு மாதிரி பகுதியை வைத்து எவ்வளவு கிராம் எடுத்துக் கொண்டீர்கள் என்றாலும் எவ்வளவு மீதம் இருந்தது என்றால் 500 கிராம் முழுவதையும் பகுத்தறிவுக்கு எடுத்துக் கொண்டேன். மீதமுள்ள ஒரு சேம்பில் யாரிடம் இருக்கும் என்றால் எங்களிடம் ஒரு சேம்பிள் தான் இருக்கும். ஆய்வகத்திற்கு ஒரு சாம்பிள் தான் வரும். உணவு மாதிரியே சரியாக நேரத்தில் ஆய்வு செய்யாமல் காலதாமதத்துடன் ஆய்வு செய்ததாலும் நீங்கள் சேம்பிளை வாங்கும் பொழுது பேக்கிங் செய்யாமல் வாங்கி அதை ஆய்வு செய்வதாலும் நீங்கள் முறைப்படி ஆய்வு செய்யாததால் ஆய்வு முடிவு சரியாக கிடைக்காது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.